Source: *Tamil Murasu*, p2
Date: 22 February 2017

# இணையப் பாதுகாப்புக்கு புதிய ஆய்வுக்கூடம்

இணையப் பாதுகாப்பு ஆய்வு, பயிற்சி ஆகியவற்றுக்குப் பயன்படுத்தக்கூடிய விதத்திலான கட்டமைப்பு சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தற்கால இணைய மிரட்டல்களைக் கையாளும் விதத்தில் ஆக்ககரமான தீர்வுகளைக் கண்டறிவதற்கான சோதனை அமைப்பாக சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகத்தின் கணினித் துறையில் இந்த தேசிய இணையப் பாதுகாப்பு ஆய்வு, மேம்பாட்டு ஆய்வுக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வகம் இணையப் பாதுகாப்பு ஆய்வு, பயிற்சிக்குப் பயன்படுத்துவதற்குத் தயார்நிலையில் உள்ள சாதனம், சூழல் ஆகியவற்றை ஒரே இடத்தில் வழங்கக்கூடிய தளமாக அமையும்.

சிங்கப்பூர் தேசிய ஆய்வு நிறுவனத்தின் தேசிய இணையப் பாதுகாப்பு ஆய்வு, மேம்பாட்டுத் திட்டத்தின் ஆதரவுடன் இந்த ஆய்வகம் நிறுவப்பட்டுள்ளது.

நேரம், முயற்சி, சூழலை அமைப்பதற்காகச் செலவிடப்படும் தொகை ஆகியவற்றை இணையப் பாதுகாப்பு தொழில்துறை சேமிக்க தேசிய இணையப் பாதுகாப்பு ஆய்வகம் உதவும் என தேசியப் பல்கலைக்கழகத்தின் துணைத் தலைவர் (கல்வி விவகாரம்) டான் எங் சை கூறினார்.

நேற்று தொடங்கிய இரண்டாவது சிங்கப்பூர் இணையப் பாதுகாப்பு ஆய்வு, மேம்பாட்டுக் கருத்தரங்கின் ஓர் அங்கமாக தேசிய இணையப்பாதுகாப்பு ஆய்வகத்தை தொடர்பு, தகவல் அமைச்சின் நிரந்தரச் செயலாளர் கேப்ரியல் லிம் இந்த ஆய்வகத்தைத் தொடங்கி வைத்தார். அந்தக் கருத்தரங்கு இன்றுடன் நிறைவு பெறும்.

பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தின் கணினி அறிவியல் துறையைச் சேர்ந்த ரூபி பி. லீ கணினிகளில் இணையப் பாதுகாப்பை மையப்படுத்தி முக்கிய உரையாற்றுவார்.

இணையத் தாக்குதல்களுக்கு எதிராக நிலைத்திருக்கக்கூடிய கணினித் திட்டங்களை உருவாக்குவது, கணினிகளில் பயன்படுத்தப்படும் வன்பொருள் மற்றும் மென்பொருட்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் வழிகள் ஆகியவை பற்றி இந்தக் கருத்தரங்கில் விவாதிக்கப்படுகிறது. பங்கேற்பாளர்கள் இந்தத் தலைப்புகளில் கருத்துகளை முன்வைப்பர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.